

புரட்சிப்

# பெரியார் முழக்கம்


திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | மார்ச் 22, 2018 | புரட்சி 17 | முழக்கம் 10 | விலை: ரூ.3.00

## இந்து – இஸ்லாம் – கிறித்துவ மதங்களின் வன்முறைகள் விளக்கப்பட்டன

# கோவையில் பாரூக் நினைவேந்தல்







இஸ்லாமிய மத அடிப்படைவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் மனித நேயப் போராளி பாரூக் முதலாமாண்டு நினைவு நாள் - குருதிக் கொடை முகாம் - மத எதிர்ப்புக் கருத்தரங்கம் - நினைவேந்தல் உரைகளுடன் கோவையில் மார்ச் 18 அன்று அண்ணாமலை அரங்கில் நிகழ்ந்தது. கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் ஏற்பாடு செய்திருந்த இந்த நினைவேந்தல் நிகழ்வில் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள், உணர்வாளர்கள் குடும்பம் குடும்பமாகப் பங்கேற்று, தோழர் பாரூக்கிற்கு வீரவணக்கம் செலுத்தினர்.

பகல் 11 மணியளவில் அண்ணாமலை அரங்கில் குருதிக் கொடை முகாமை பாரூக்கின் மனித நேயப் பயணத்தில் துணை நின்ற அவரது துணைவியார் ரசிதா பாரூக் தொடங்கி வைத்தார். 50க்கும் மேற்பட்ட பெண்களும், ஆண்களும் குருதிக் கொடை வழங்கினர். மதத்திற்கு குருதி பேதம் இல்லை என்பதை உணர்த்தும் நோக்கத்துடன் இந்த முகாமை தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

பிற்பகல் 4 மணியளவில் ‘வரலாற்றில் மதங்களின் வன்முறைகள்’ என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடை பெற்றது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமை தாங்கினார். கடவுள் என்ற கற்பனையைவிட மதம் மிகவும் ஆபத்தானது என்று பெரியார் சுட்டிக்காட்டிய கருத்தை முன் வைத்து, பெரியாரின் இயக்கம் இந்து பார்ப்பனிய மதத்துக்கு எதிராக அதிகம் பேசினாலும் அனைத்து மதங்களையுமே விமர்சனத்துக்கு உள்ளாக்கி யிருக்கிறது என்று சுட்டிக் காட்டினார்.

1934ஆம் ஆண்டு பகுத்தறிவு ஏட்டில் பெரியார் மதம் குறித்து எழுதிய விரிவான கட்டுரையில், “நாம் மாத்தி ரமல்லாமல் நம்மைப்போல் கஷ்டப்படும் மக்கள் கோடிக் கணக்காக எல்லா மதங்களிலும் இருந்து வருகிறார்கள் என்பதும் நமக்குத் தெரியும். ஆதலால்தான் மதங்கள் ஒழிக்கப்படுவதாலேயே மனித சமூகத்துக்கு ஒற்றுமையும் சாந்தியும் ஏற்படும் என்று கருதுவதோடு பணக்காரத் தன்மையின் கொடுமையும் ஒழியுமென்று கருதுகின்றோம்” என்று எழுதியிருப்பதை எடுத்துக் காட்டினார்.

(4ஆம் பக்கம்)

# தமிழக அரசே பதில் சொல்!

# மத யாத்திரையா? அரசியல் யாத்திரையா?

‘இராமராஜ்யம் அமைப்போம்’ என்ற முழக்கத்தோடு உலாவரும் ‘இராமராஜ்ய யாத்திரை’யை மத ஊர்வலம் என்றும், அதை அரசியலாக்குவதை அனுமதிக்க முடியாது என்றும் தமிழக பா.ஜ.க. பினாமி முதல்வர் சட்டமன்றத்தில் உளறியிருக்கிறார். அவரிடம் சில கேள்விகள்:

- இராம பக்தி – இராம வழிபாட்டு பஜனை ஊர்வலம் என்று வந்தால், அது மத ஊர்வலம். ஆனால் இந்தியாவில் நடைபெறும் ஜனநாயகப் பாராளுமன்ற ஆட்சியை தூக்கி எறிந்துவிட்டு, ‘இராமராஜ்யத்தை’ அதாவது இராமன் நடத்திய ‘அரசை’ அமைக்க வேண்டும் என்ற முழக்கத்தோடு வருவது மத ஊர்வலமா? அரசியல் ஊர்வலமா?
- கடந்த 2017 டிசம்பர் 6ஆம் தேதி மசூதி இடிக்கப்பட்ட நாளில் உ.பி. மாநில அரசு அயோத்தியில் பாபர் மசூதி இடிப்பு வெற்றி விழாவை நடத்தியதோடு அதில் மாநில முதல்வர் மாநில ஆளுநர் பங்கேற்று இராமர் கோயிலைக் கட்டுவோம் என்று சபதம் எடுத்தது தமிழக பா.ஜ.க. பினாமி முதல்வருக்கு தெரியுமா? அதே அயோத்தியிலிருந்து இப்போது இராமர் கோயிலைக் கட்டுவோம் என்ற முழக்கத்துக்கு ஒரு இரத யாத்திரை உ.பி. முதல்வர் ஆசியோடு புறப்பட்டு வருகிறது. (இதை உ.பி. முதல்வர் தொடங்கி வைப்பதாக அறிவிக்கப்பட்டு கடைசியில் மாற்றப்பட்டது) அது தமிழ்நாட்டுக்குள் நுழைகிறது என்றால் அது மத ஊர்வலமா? அரசியல் ஊர்வலமா?
- அரசியல் சட்டத்தின் 15ஆவது பிரிவு மதம், ஜாதி, பாலின அடிப்படையில் பாகுபாடுகளை அரசு காட்டக் கூடாது என்று தெளிவாகக் கூறுகிறது. “The state shall not discriminate against any citizen on grounds only of religion, race, caste, sex, place of birth or any of them” என்று கூறுகிறது.

  அரசு மதம், இனம், ஜாதி, பால், பிறந்த இடம் என்ற அடிப்படையில் – எந்தக் குடிமகனுக்கும் எதிராக பாகுபாடுகாட்டக் கூடாது என்ற அரசியல் சட்டப் பிரிவின் கீழ் செயல்பட வேண்டிய ஒரு அரசு. ‘இராமராஜ்யம்’ என்ற பிற மதத்தினருக்கு எதிரான மதவாத அரசை அமைக்கும் நோக்கத்தோடு, நடக்கும் இரதயாத்திரையை அனுமதிக்கலாமா?
- ஏனைய மாநிலங்களில் எதிர்ப்பு இல்லாதபோது தமிழ்நாட்டில் ஏன் எதிர்க்கிறார்கள் என்கிறார், பா.ஜ.க. பினாமி முதல்வர். எதிர்க் கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலின் இதற்கு சரியாக பதிலடி கொடுத்துள்ளார். “இங்கே தான் பெரியார் பிறந்திருக்கிறார்; இது பெரியார் மண். அதனால்தான் எதிர்ப்பு” என்பதே அவர் தந்துள்ள பதிலடி.

  ஏனைய மாநிலங்கள் கேரளா உள்பட நீட் தேர்வு எதிர்ப்பு போராட்டங்கள் நடைபெறவில்லை; தமிழகம் மட்டும்தான் ஏற்கவில்லை. தமிழ்நாடு மட்டும் ஏன் எதிர்க்க வேண்டும்? என்ற அபத்தமான கேள்வியை எடப்பாடி கேட்பார் போல!

  கேரள அரசு மாட்டுக்கறி சாப்பிடுவதை உறுதி செய்து சட்டம் கொண்டு வந்ததுபோல எடப்பாடி ஏன் இங்கே கொண்டு வரவில்லை? என்று ஒரு கேள்வியை கேட்டால், அதற்கு எடப்பாடி என்ன பதிலைக் கூறுவார்? பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பேசி சமாளிக்கத் தொடங்கினால், இப்படிப்பட்ட கேள்விகளும் அடுத்தடுத்து எழவே செய்யும்.

  காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கூடாது என்று கருநாடக மாநிலம் கூறும்போது தமிழ்நாடும் அதே கோரிக்கையை பின்பற்றலாமே என்று எடப்பாடி கூறுவாரா? (மோடியிடமிருந்து உத்தரவு வந்தால் அப்படியும் கூறுவார் போல)
- 144 தடை உத்தரவை நெல்லை மாவட்டம் முழுதும் பிறப்பித்திருக்கிறது எடப்பாடி ஆட்சி. 5 பேருக்கு மேல் கூடக் கூடாது. ஆனால் இராமராஜ்ய யாத்திரையில் மட்டும் நூற்றுக்கணக்கானவர்கள் வலம் வரலாமாம். 144 தடை – இராமராஜ்ய இரதயாத்திரைக்கு மட்டும் பொருந்தாது! எதிர்த்துப் போராடுகிறவர்களுக்கு மட்டும் பொருந்தும் என்று ஒரு ஆட்சி முடிவெடுக்கிறது என்றால் தமிழ்நாட்டிலே அரசியல் வர்ணாஸ்ரமத்தை வெளிப்படுத்தும் ‘இராமராஜ்யத்தை’ பா.ஜ.க. பினாமி ஆட்சி தொடங்கி விட்டதா?
- இஸ்லாமிய இராஜ்யம், கிறிஸ்தவ இராஜ்யம் என்று பிற மதத்தவர்கள் யாத்திரையை நடத்தினால் ‘மத ஊர்வலம்’ என்று கூறி தமிழக அரசு அனுமதிக்குமா?
- நெல்லை மாவட்டத்துக்குள் பிற மாவட்டத்தினர் நுழையத் தடையாம். ஆனால் பிற மாநிலத்துக்காரர்கள் காவிக் கொடியோடு வலம் வரலாமாம். இது என்ன ‘வர்ணாஸ்ரம’ 144! இது, ‘இராமராஜ்ய’ 144 இப்படித்தான் இருக்குமோ?

  இந்தக் கேள்விகளுக்கு என்ன பதில்?

# ‘இராம ராஜ்யம்’ என்பது பார்ப்பன-மனுதர்ம இராஜ்யமே!

‘இராம ராஜ்யம்’ என்று காந்தியே கூறினாரே; அதைத் தானே நாங்கள் கூறுகிறோம் என்று பா.ஜ.க.வினர் சிலர் கூறுகிறார்கள். பா.ஜ.க. பேசும் இராஜ்யம், இந்து புராண நாயகன் ‘இராமன்’ அமைத்ததாக புராணங்களில் கூறப்படும் ‘இராஜ்யம்’. ஆனால் காந்தி கூறியது புராண கடவுளான ‘இராமராஜ்யம்’ அல்ல.

வழிபாடு கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு காந்தியே இதைத் தெளிவு படுத்தியிருக்கிறார்:

“Let no one commit the mistake of thinking that Rama Rajya means a rule of Hindus.” (1947ஆம் ஆண்டு பிப். 6ஆம் நாளில் காந்தி கூறியது; காந்தியார் நூல் தொகுப்பு)

தான் கூறும் இராமன் ஆட்சி ‘இந்துக்களின் ஆட்சி அல்ல’ என்று தெளிவுபடுத்துகிறார், காந்தி.

சரி, ‘இராம இராஜ்யம்’ எப்படி நடந்தது? வால்மீகி இராமாயணம் என்ன கூறுகிறது?

- ‘சம்பூகன்’ என்ற பழங்குடி ‘சூத்திரன்’, ‘வர்ணாஸ்ரமத்தை’ மீறுகிறான். கடவுளை நேரடியாக வணங்கும் உரிமை பிராமணர்களுக்கு மட்டுமே உண்டு என்பதை மீறி, கடவுளை நோக்கி தவமிருக்கிறான். ‘இராம இராஜ்யத்தில்’ அகால மரணங்கள் ஏதும் நடப்பதில்லை என்று கூறுகிறது வால்மீகி இராமாயணம். ஆனால், ‘சம்பூகன்’ வர்ணாஸ்ரம தர்மத்தை மீறியதால் ஒரு பிராமணப் பெண் வயிற்றில் உருவான கரு சிதைந்து, அகால மரணம் நிகழ்ந்து விட்டது என்று இராமனிடம், ‘பிராமணர்கள்’ முறையிடுகிறார்கள். நாரதனோடு ஆலோசனை நடத்துகிறான் இராமன். உடனே உருவிய வாளோடு புறப்படுகிறான். ‘சம்பூகனிடம்’ விளக்கம்கூட கேட்கவில்லை. அவன் தலையை வெட்டி வீழ்த்துகிறான். உடனே தேவர்கள் ‘பூமாரி’ பொழிந்தார்களாம். ‘சூத்திரன்’ அவனுக்கு விதிக்கப்பட்ட தர்மத்தை மீறினால் ‘மரண தண்டனை’ என்பதே இராம ராஜ்ய நீதி. வால்மீகி இராமாயணத்திலுள்ள இந்த சம்பவத்தை தமிழில் எழுதிய கம்பன் ‘தமிழ்ச் சமூகம்’ இதை ஏற்காது என்பதால் திட்டமிட்டு தவிர்த்து விடுகிறான். ‘வால்மீகி’ இராமனை, அதாவது ‘ஒரிஜினல்’ வர்ணாஸ்ரம இராமனை தமிழ்நாடு ஏற்காது என்ற உண்மை கம்பனுக்கே தெரிந்திருக்கிறது. ஆனால் எடப்பாடி ஆட்சிக்குத்தான் உரைக்கவில்லை.
- இராமன் வனவாசம் போவதற்கு முன்பு, ‘நாட்டில் பிராமணர்களுக்கு எந்தக் குறையும் வராமல் பார்த்துக் கொள்’ என்று தம்பி பரதனுக்கு உபதேசம் செய்துவிட்டு, தன்னுடைய பொன் பொருள் ஆபரணங்களையெல்லாம் ‘பிராமணர்’களுக்கு தானம் வழங்கி விட்டுத்தான் வனவாசம் போனான் - **இதுதான் இராமராஜ்யம்.**
- காட்டுக்கு தம்பி பரதன் தன்னைச் சந்திக்க வந்தபோது, “பிராமணர்கள் சுபிட்சமாக இருக்கிறார்களா? அவர்களுக்கு எந்தக் குறையும் வந்து விடக் கூடாது” என்று கவலையுடன் அறிவுறுத்துகிறான். ஏனைய வெகு மக்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை.
- வால்மீகி இராமாயணத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் சி.ஆர். சீனிவாச அய்யங்கார். அயோத்தியா காண்டம் 100ஆவது சருக்கம் - பரதனிடம் இராமன் நடத்திய விசாரணையை இவ்வாறு கூறுகிறார், அய்யங்கார்:

  “பவுத்தன், சார்வாகன் (இவர்கள் வேதத்தை எதிர்த்தவர்கள்) முதலிய நாஸ்திகர்களுடன் பழகாமல் இருக்கிறாயா? .... அவர்கள் புராணங்களையும் தர்ம சாஸ்திரங்களையும் பெரியோர்களுடைய சம்பிரதாய பரம்பரைப்படி அர்த்தம் செய்யாமல், கேவலம் தர்க்கத்தைப் பிரயோகித்து, அவை இகத்திலும் பரத்திலும் பயனற்றவை என்று வாதிப்பவர்கள்; அவர்களை உள் நாட்டில் இருக்க விடாதே; (அதாவது அழித்துவிடு)” என்கிறான் இராமன். வேதங்களை எதிர்க்கும் நாத்திகர்களை அழித்து விட வேண்டும் - **இதுதான் இராம ராஜ்யம்.**
- பரதனிடம் மேலும் இராமன் கூறுகிறான்: “திருடனும் பவுத்தனும் ஒன்றே. பவுத்தனுக்கும் நாஸ்திகனுக்கும் பேதமில்லை.” (சுந்தரகாண்டம் 15ஆவது சருக்கம்) - அதனால்தான் பகுத்தறிவாளர்கள் இப்போதும் இராம பக்தர்களால் கொலை செய்யப்படுகிறார்கள்.

  புத்த மார்க்கம் தோன்றிய பிறகு அதை வீழ்த்த பார்ப்பனர்களால் எழுதப்பட்டதே இராமாயணம் என்பதற்கு - இது ஒரு மறுக்க முடியாத சான்று என்று எடுத்துக் காட்டுகிறார் பெரியார்.

  புத்தர்களையும் சிந்திப்பவர்களையும், பகுத்தறிவாளர்களையும் திருடன் என்பதுதான் **இராமராஜ்யம்.**

  “இராமராஜ்யத்தில் பிராமணர்கள் - ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் -அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட கடமைகளையும் விதிக்கப்பட்ட வேலைகளையும் ஒழுங்காகக் கடைபிடித்து அதில் திருப்தியடைந்து, கடவுளின் ஆசியைப் பெற்று வருகிறார்கள்” என்று பெருமையுடன் கூறுகிறது - வால்மீகி இராமாயணம். (6ஆவது சருக்கம்)
- காட்டிலிருந்து நாட்டுக்குத் திரும்பிய இராமன், சீதையின் கற்பை சந்தேகித்து, உண்மையான கற்பை நிரூபிக்க, தீயில் புகுந்து வெளியே வருமாறு உத்தரவிடுகிறான். சீதை தீயில் குதித்து கற்பை நிரூபித்தாள். ஆனால் தான் கற்புடையவனாக இருந்தேன் என்பதை இராமன் நிரூபிக்க தீயில் இறங்கவில்லை. ஆணுக்கு ஒரு நீதி; பெண்ணுக்கொரு நீதி **இதுதான் இராமராஜ்யம்.**
- இராமராஜ்யம் என்பது ‘வர்ணாஸ்ரம ராஜ்யம்’. வேத எதிர்ப்பாளர்களை அழித்து ஒழிப்பதே **ராமராஜ்யத்தின் தர்மம்.**

இந்த இராஜ்யத்தை அமைக்கத்தான் இப்போது யாத்திரை வருகிறார்கள். இதை மானமுள்ளவர்கள் அனுமதிப்பார்களா?

## காவிக் கூட்டத்தின் புளுகுக்கு மறுப்பு

# ஸ்டீபன் ஹாக்கிங் வேதத்தைப் புகழ்ந்தாரா?

மணிப்பூர் பல்கலைக்கழகத்தில், அறிவியல் மாநாட்டின் தொடக்கவிழாவில் உரையாற்றிய மத்திய அறிவியல் - தொழில்நுட்பத்துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன், அண்மையில் காலமான உலகப்புகழ் பெற்ற பேரண்ட அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங் பெருமையைப் பேசுவதாக நினைத்துக்கொண்டு, “ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கண்டுபிடித்த இ=எம்சி ஸ்கொயர் என்ற சமன்பாட்டைக் காட்டிலும் உன்னதமான அறிவியல் கோட்பாடுகள் இந்திய வேதங்களில் இருந்திருக்கின்றன,” என்று சொல்லியிருப்பதாகக் கூறி, அரங்கில் கூடியிருந்த அறிவியலாளர்களை அசர வைத்தார். விழா முடிந்து வெளியே வந்த அமைச்சரிடம், அவர் பேசியதற்கு ஆதாரம் தர இயலுமா, ஸ்டீபன் ஹாக்கிங் எங்கே எப்போது அப்படிச் சொன்னார் என்று தெரிவிக்க முடியுமா என்று கேட்டார்கள். “அதைத் தேடுவது உங்கள் வேலை. தேடுங்கள், உங்களுக்குக் கிடைக்கவில்லை என்றால் பிறகு நான் ஆதாரம் தருகிறேன்,” என்று கூறி நழுவினார் அமைச்சர்.

ஊடகவியலாளர்கள் உடனே தேடலில் இறங்கினார்கள். அதில், ஸ்டீபன் ஹாக்கிங் பெயரில் ஒரு சமூக ஊடகப் பக்கம் இருக்கிறது, அதிலே அவர் இப்படிச் சொன்னதாகப் பதிவாகியிருக்கிறது என்று தெரியவந்தது. தொடர்ந்து தேடியபோது கிடைத்த அடுத்த தகவல், அந்த சமூக ஊடகப் பக்கம் ஹாக்கிங் பெயரால் பதிவேற்றப்பட்டு வந்த ஒரு போலியான பக்கம்! யாரோ ஒரு ஹரி என்பவர் அந்தப் போலிப்பக்கத்தைக் கையாண்டுவந்திருக்கிறார். போலிப் பக்கத்திற்கான இணைப்பு அடையாளம் ‘ஸ்டீபன் ஹாக்கிங்’ என்று உள்ளது. உண்மையான இணைப்பு அடையாளமோ ‘ஸ்டீபன் ஹாக்கிங் ஸ்டீபன் ஹாக்கிங் என்பதையும் ஊடகவியலாளர்கள் வெள்ளியன்று மாலையே கண்டுபிடித்து விட்டார்கள்.

போலிப் பக்கத்தில், சிவராம் பாபு என்ற வேத வல்லுநர் ஒருவர் 2011ல் எழுதிய ஒரு புத்தகத்தைப் படித்த ஹாக்கிங், வேதத்தில் ஐன்ஸ்டீனின் சமன்பாட்டைக் காட்டிலும் மேலான அறிவியல் கோட்பாடுகள் இருப்பதாகத் தானே கூறுவது போலப் பதிவாகியுள்ளது.

சிவராம் பாபு பின்னர் ஹாக்கிங்குக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பித் தனது நன்றியைத் தெரிவித்து, இன்னொரு புத்தகம் அனுப்புவதாகவும் அதனைப் படித்துவிட்டுக் கருத்துக்கூறுமாறும் கேட்டுக் கொண்டிருக்கிறார். அதற்குப் பதிலளித்து ஸ்டீபன் ஹாக்கிங் அலுவலகப் பணியாளர் அனுப்பிய மின்னஞ்சலில், ஹாக்கிங்குக்கு இப்படி நிறைய ஆவணங்கள் வந்து குவிவதால் அவற்றையெல்லாம் படித்துக் கருத்துச் சொல்வது இயலாத செயல் என பணிவோடு தெரிவிக்கப்பட்டிருக்கிறது!

ஆக வேதம் பற்றி ஸ்டீபன் ஹாக்கிங் எதுவும் சொல்லவில்லை. ஆனால், 2001ல் புதுதில்லிக்கு வந்த ஹாக்கிங், அங்கே தனது கணினி உதவிக்குரலில் நிகழ்த்திய உரையில், “பெரும்பாலான அறிவியலாளர்கள் சோதிடத்தை நம்பாததற்குக் காரணம் என்னவென்றால், பரிசோதனை அடிப்படையில் நிறுவப்பட்ட நமது கோட்பாடுகளோடு அது ஒத்துப்போகவில்லை என்பதேயாகும்” என்று தெளிவாகக் கூறினார்.

‘காலத்தின் சுருக்கமான வரலாறு’ என்ற தமது புத்தகத்தின் முதல் பாகத்தின் முடிவில், ”பேரண்டம் குறித்த எனது ஆராய்ச்சியின் நோக்கம் கடவுளின் மனசை அறிவதே,” என்று கூறி பலரையும் திகைக்க வைத்து, இரண்டாம் பாகத்தின் நிறைவாக, ”இந்த அறிவியல் உண்மைகள் அனைத்தும் இப் பேரண்டத்தைப் படைக்கக் கடவுள் என்றொருவர் இருந்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று காட்டுகின்றன,” என்று தெளிவுபடுத்தியவர் ஹாக்கிங். அவர் பெயரால் ஒரு சமூக ஊடகப் பக்கத்தை நடத்தியது மோசடி என்றால், அறிவியல் மாநாட்டில் அவர் பெயரை அமைச்சர் இப்படிப் பயன் படுத்தியதை என்னவென்பது?

## நன்கொடை

திருச்சி சுப்பிரமணியபுரம், நட்சத்திரா மொபைல்ஸ் உரிமையாளர் எஸ்.இரவிச்சந்திரன், 10.3.2018 அன்று திருச்சியில் கழகத் தலைவரிடம் கழக வளர்ச்சி நிதியாக ரூ.10,000/- அளித்தார். (நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் - ஆர்)

## சென்னை கருத்தரங்கில் விடுதலை இராசேந்திரன் பேச்சு (6)

# ‘உ.வே.சா.’வின் உத்தமதானபுரம் உருவான கதை

‘ஆண்டாள் முதல் சங்கராச்சாரி வரை... தமிழை மறுக்கும் வேதமரபுகள்’ என்ற தலைப்பில் ஜன.30, 2018 அன்று சென்னை இராயப்பேட்டை ஆனந்த் அரங்கில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய கருத்தரங்கில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிகழ்த்திய உரையின் விரிவாக்கம். (8.3.2018 இதழ் தொடர்ச்சி)

திருப்பள்ளியெழுச்சிக்கு எதிராக வடமொழியில் சுப்ரபாதம் ஏன் வந்தது என்பதைப் பார்த்தோம். வேத மதம் சமஸ்கிருத மொழியை மட்டுமே ஏற்கிறது. தமிழ் உள்ளிட்ட ஏனைய மொழிகளை வேத புரோகித மதம் ஏன் மறுக்கிறது என்பதற்கு வேதமே விளக்கம் தருகிறது.

“தஸ் மாது ப்பிரா மணனே
நம் பேச்சித வை
நம அபபாஷித வை”

இந்த சுக்ல யஜூர் வேதம் இதன் கருத்து என்ன? “தேவ-அசுரன் போராட்டத்தில் திராவிட-ஆரியருக்கான போரில் சமஸ்கிருதம் பேசிய தேவர்கள் வெற்றி பெற்றார்கள். சமஸ்கிருதம் பேசாத மிலேச்சர்கள் தோற்றார்கள். எனவே சமஸ்கிருதம் தவிர ஏனைய மொழிகள் கெட்ட மொழி; மிலேச்ச பாஷை” என்பதே இந்த சுலோகத்தின் அர்த்தம்.

தமிழ் மன்னர்கள் கதைக்கு வருவோம்.

இராஜராஜன், தேவாரப் பாடல்களை மீட்டெடுத்தான் என்று வரலாற்றுக் குறிப்புகள் இருந்தாலும், கோயிலுக்குள் வழிபாட்டு மொழியாக ‘சமஸ்கிருதத்தையே’ முன்னிலைப்படுத்தி பார்ப்பன அடிமைகளாகவே தமிழ் மன்னர்கள் செயல்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஆட்சியில் வடநாட்டுப் பார்ப்பனர்கள் இறக்குமதி செய்யப்பட்டார்கள்.

வரலாற்று ஆய்வாளர் கே.கே.பிள்ளை கூறுகிறார்:

“வடவரின் இலக்கியமும், சமய கருத்துகளும், பண்பாடுகளும் தமிழ்நாட்டில் பெருக்கெடுத்துப் பாயவே அவற்றை வளர்ப்பதற்கும், மேற்கொண்டு பல புதுமைகளைப் பெருக்கிக் கொள்வதற்கும், மன்னர்கள் ஆயிரக்கணக்கில் அயல்நாட்டு பிராமணரை இறக்குமதி செய்து, கோயில்களிலும், மடங்களிலும், கல்வி நிறுவனங்களிலும், அவர்களை அர்ச்சகர்களாகவும், புரோகிதர்களாகவும், வேத பாராயணம் செய்வோராகவும் ஆங்காங்கு அமர்த்தினர். வேத நெறி தழைத்தோங்குவதற்காக மன்னரும் மக்களும், புதிதாகக் குடிபெயர்ந்த பிராமணருக்குப் பொன்னையும் பொருளையும் குடியுரிமைகளையும் வாரி வழங்கினர். பிராமணருக்குத் தனி நிலங்களும் முழு கிராமங்களும் தானமாக வழங்கப்பட்டன. அக்கிராமங்கள் அக்கிரகாரம், அகரம், சதுர்வேதி மங்கலம், பிரமதேயம் என பலப் பெயரில் வழங்கின”

- என்கிறார், தலைசிறந்த ஆய்வாளர் கே.கே.பிள்ளை. (நூல்: தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும்)

பார்ப்பனர்கள் தமிழ்அரசர்களைப் பயன்படுத்தி அதிகாரத்தை எப்படி சூழ்ச்சியாக தக்க வைத்துக் கொண்டார்கள் என்பதையும் கே.கே.பிள்ளை சுட்டிக் காட்டுகிறார். தமிழையும் தமிழ் மன்னர்களையும் பார்ப்பனியம் அடிமைப்படுத்தியது என்று பெரியார் கூறினால், அவரை தமிழ் விரோதி, தமிழ் மன்னர் பெருமைகளை சீர்குலைக்கிறார் என்று குற்றம் சாட்டுகிறவர்கள், மிகுந்த இறை நம்பிக்கையுள்ள கே.கே.பிள்ளை போன்ற ஆய்வாளர்களே சுட்டிக்காட்டுவதற்கு, என்ன பதிலை கூறுவார்கள் என்று கேட்கிறோம்.

“அரசாங்க அதிகாரமும், சமயச் செல்வாக்கும் குவியப் பெற்றிருக்கும் கைகள் என்றுமே ஓய்ந்திருப்பதில்லை. இது பன்னாட்டு வரலாறுகள் காட்டும் ஒரு பேருண்மையாகும். அந்த அதிகாரத்தையும் செல்வாக்கையும், மென்மேலும் பெருக்கிக் கொள்ளவும், பெருகினவற்றை அழியாமல் பாதுகாத்துக் கொள்ளவும், அக்கைகள் பரபரத்துக் கொண்டிருப்பது இயல்பு. எனவே உழைப்பின்றியே தானமாகப் பெற்ற நிலங்களும், ஊர்களும், அரசாங்கச் செல்வாக்கில், வேள்வி வளர்க்கும் தனி உரிமையும், தம்மிடம் குவிக்கப் பெற்ற பிராமணர்கள் அவையும் எக்காலமும் தம்மிடத்தே நிலைத்து நிற்கவும், மென்மேலும் வளர்ந்து வரவும், தம் குலத்தின் தலைமைப் பதவி நீடித்து வரவும், பல முயற்சிகளை மேற்கொள்ளலானார்கள். மன்னரின் முழு ஆதரவையும் அவர்கள் பெற்றனர். வேந்தர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் சூட்சுமங்களையும், கோத்திரங்களையும், சூத்திரங்களையும் கற்பித்துக் கொடுத்தனர். மன்னர்களும் சாதி ஒழுக்கத்தை நிலை நாட்டுவதே தம் சீரிய கடமையாகும் எனக் கூறும் மெய்க் கீர்த்திகளைப் புனைந்து கொண்டனர். ஆரிய வழக்க வழக்கத்தைப் பாராட்டிக் கூறும் சாஸ்திரங்களும் புராணங்களும் எழுந்தன. அவற்றை பிராமணர் பயில்வதற்காக அரசர்கள் பல கல்வி நிறுவனங்களை அமைத்துக் கொடுத்தனர்.”
(நூல்: தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும்)

அரசர்களுக்கு வம்சங்களையும் கோத்திரங்களையும் கற்பித்துக் கொடுத்து பார்ப்பன தர்மத்தின் அடிப்படையில் அவரவர் குல-ஜாதி ஒழுக்கத்தைப் பேண வேண்டும். அதைக் காப்பதே அரசு தர்மம் என்று மனனர்களின் மூளையில் ஏற்றியவர்கள் பார்ப்பனர்கள்.

கே.கே. பிள்ளை கூறும் மற்றொரு முக்கிய கருத்தையும் சுட்டிக் காட்ட வேண்டும்.

“பிராமணர் தமிழகம் முழுதும் பரவி குடியமர்ந்தார்கள். ஊநிறைவுடன் நல் வாழ்க்கையில் நின்று வேதம் ஓதி, இறைப்பணி புரிந்து அறம் ஓம்பி, மக்களிடையே கல்வி அறிவையும் ஆன்மிக விழிப்பையும் தோற்றுவிப்பதற்காகவே மன்னரும் மக்களும் அவர்கட்குத் துணை நின்றார்கள். ஆனால், விளைவோ வேறு விதமாயிற்று. தமிழ் மன்னரும், தமிழ் மக்களும் வரையாது (குறையாது) வழங்கிய வாழ்க்கை நலன்களைப் பெற்ற பிராமணர்கள் தனித்து வாழ்ந்து, மக்களிடையே குல வேறுபாடுகளைப் பெருக்கி, தமிழர் அனைவரையுமே சூத்திரர் என்ற இழி குலத்தினராகக் கருதி, கோயில்களிலும், மடங்களிலும், ஏனைய பொது அறச் சாலைகளிலும் ஒதுக்கி வைத்து விட்டார்கள். ஒரு கோயிலைக் கட்டி குடமுழுக்குச் செய்விக்கும் தமிழன் ஒருவன் தான் கட்டிய கோயிலிலேயே தொலைவில் ஒதுங்கி நிற்கவும், ‘பிராமணர்களின்’ பின்னின்று கோயில் ‘பிரசாதங்களை’ப் பெறவும் ஒப்புக் கொண்டு விட்டான். கோயில் கருவறையில் வடமொழியின் ஆரவார ஓசை ஓங்கவும், தமிழ் ஒலி மறையவும் வழக்காறுகள் வகுக்கப்பட்டன. தேவார ஆசிரியர்கள் காலத்தில் தமிழர் கருவறைக்குள் செல்லும் உரிமை பெற்றிருந்தும், சோழர் பாண்டியன் காலத்தில் அவ்வுரிமையை அவர்கள் இழந்து விட்டார்கள்.” (நூல்: தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும்)

**ஆய்வாளர் கே.கே.பிள்ளை சுட்டிக் காட்டும் உண்மைகள்!**

கருவறைக்குள்ளேயிருந்து தமிழன் எப்படி வெளியேற்றப்பட்டான் என்பதை - இப்படி படம் பிடித்துக் காட்டுகிறார், கே.கே. பிள்ளை. இன்று வரை தமிழ்நாட்டில் தமிழன் கருவறைக்கு வெளியே தீண்டப்படாதவனாகவேத் தானே நிற்கிறான்? இந்தப் பார்பபனியத் தீண்டாமையை அப்படியே விமர்சிக்காமல் பார்ப்பனிய ஜாதிப் பாகுபாடுகளை எதிர்த்து அதற்கான இயக்கங்களை நடத்தாமல் தமிழர் இன ஓர்மை எப்படி சாத்தியமாகிட முடியும்?

பார்ப்பனர்கள் எப்படி சூழ்ச்சிகரமாக நிலங்களைக் கைப்பற்றினார்கள் என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சங்ககால இலக்கியங்களை தேடிக் கண்டுபிடித்து அதை பதிப்பித்தவரான ‘தமிழ் தாத்தா’ என்று பார்ப்பனர்கள் பெருமை பேசும் உ.வே.சாமிநாத அய்யர், தனது சுயசரிதையை எழுதியிருக்கிறார். அதில் சொந்த ஊரான உத்தமதானபுரம் எப்படி தங்கள் இனத்துக்குக் கிடைத்தது என்ற வரலாற்றைப் பதிவு செய்திருக்கிறார். அதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

“சற்றேறக்குறைய இருநூறு வருஷங்களுக்கு முன்பு தஞ்சாவூர் ஸமஸ்தானத்தை ஆண்டு வந்த அரசர் ஒருவர் தம்முடைய பரிவாரங்களுடன் நாடு முழுவதையும் சுற்றிப் பார்க்கும் பொருட்டு ஒரு முறை தஞ்சாவூரிலிருந்து புறப்பட்டார். அங்கங்கே உள்ள இயற்கைக் காட்சிகளையெல்லாம் கண்டுகளித்தும், தலங்களைத் தரிசித்துக் கொண்டும் சென்றார். இடையில் தஞ்சைக்குக் கிழக்கே பதினைந்து மைல் தூரத்தில் உள்ள பாபநாசத்திற்கு அருகில் ஓரிடத்தில் தங்கினார். வழக்கம்போல் அங்கே போஜனம் முடித்துக் கொண்ட பிறகு தாம்பூலம் (வெற்றிலைப் பாக்குப் போடுதல்) போட்டுக் கொண்டு சிறிது நேரம் சிரம பரிகாரம் செய்திருந்தார். தம்முடன் வந்தவர்களோடு பேசிக் கொண்டு பொழுதுபோக்குகையில் பேச்சுக்கிடையே அன்று ஏகாதசியென்று தெரிய வந்தது. அரசர் ஏகாதசியன்று ஒருவேளை மாத்திரம் உணவு கொள்ளும் விரதம் உடையவர். விரத தினத்தன்று தாம்பூலம் தரித்துக் கொள்ளும் வழக்கமும் இல்லை. அப்படியிருக்க, அவர் ஏகாதசியென்று தெரியாமல் அன்று தாம்பூலம் தரித்துக் கொண்டார். எதிர்பாராத படி, விரதத்திற்கு பங்கம் நேர்ந்ததைப் பற்றி வருந்திய அரசர், அதற்கு என்ன பரிகாரம் செய்யலாமென்று சில பெரியோர்களைக் கேட்டார். அப்பெரியோர்கள், “ஓர் அக்கிரகாரப் பிரதிஷ்டை செய்து வீடுகள் கட்டி வேத வித்துக்களாகிய அந்தணர்களுக்கு அவ்வீடுகளோடு பூமியையும் தானம் செய்தால் இந்தத் தோஷம் நீங்கும்” என்றார்கள்.

“இதுதானா பிரதமாதம்? அப்படியே செய்து விடுவோம். இதே இடத்தில் பிரதிஷ்டை செய்வோம்” என்று அரசர் மனமுவந்து கூறி, உடனே அங்கே ஓர் அக்கிரகாரத்தை அமைக்க ஏற்பாடு செய்தார். அதில் 48 வீடுகளைக் கட்டி, வேதத் தியானம் செய்த 48 பிராமணர்களை அருகிலும் தூரத்திலும் உள்ள ஊர்களிலிருந்து வருவித்து, வீடுகளையும் நிலத்தையும் தானம் செய்தார். அந்த உத்தமமான தானப் பொருளாக அமைந்தமையால், அவ்வூர் ‘உத்தமதானபுரம்’ என்னும் பெயரால் வழங்கலாயிற்று. அந்தக் குடும்பத்தினர் அனைவரும் உத்தமதானபுரத்தில் வைதீக ஒழுக்கம் பிறழாமல் வாழ்ந்து வந்தார்கள். இந்த உத்தமதானபுரம் இன்னும் தன் பெயரை இழந்துவிடாமல் தஞ்சாவூர் ஜில்லாவில் பாபநாசம் தாலுகாவில் ஒரு கிராமமாக இருந்து வருகின்றது.”

**(உ.வே.சாமிநாதையர், ‘என் சரித்திரம்’ சுருக்கம், பக்.1, 2)**

‘ஏகாதசி’ விரத நாளில் ஒரு மன்னர், ‘வெற்றிலைப் பாக்கு’ போட்டு விட்டார் என்ற ‘சாஸ்திர மீறலுக்காக’ பார்ப்பனர்கள் பரிகாரமாக 48 வீடுகளோடு ஒரு அக்கிரகாரத்தையே உருவாக்கித் தருமாறு கேட்க அதை முட்டாள் தமிழ் மன்னர்களும் ஏற்று செயல்படுத்தியிருக்கிறார்கள். இப்படித்தான் தமிழ் மன்னர்களை ஏமாற்றி, அவர்களை தங்கள் கட்டுக்குள் வைத்திருந்தார்கள் பார்ப்பனர்கள். இன்றைக்கும் அதே நிலைதானே நீடிக்கிறது? பெரியார் சிலையை உடைக்க வேண்டும் என்று எச். ராஜா பெயரில் பதிவிட்ட அவரது ‘அட்மினை’ கண்டிக்கறேன் என்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கும் ஒரு ‘சூத்திரர்’, எச்.ராசாவிடம் தொடை நடுங்கிப் போய் அறிக்கை விடுகிறார் என்றால், இவர்களும் ‘ஏகாதசியில் வெற்றிலைப் பாக்கு போட்ட’ மன்னர்களின் தொண்டரடிப் பொடிகளாகவே இருக்கிறார்கள் என்பதைத்தானே உணர்த்திக் கொண்டிருக்கிறது?

**(தொடரும்)**


“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 9841489896
newsdvk@gmail.com

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# இராம ரதயாத்திரையை நிறுத்து!

# பெரியார் மண் கொதித்தெழுந்தது!

இராமராஜ்ய ரதயாத்திரைக்கு தமிழகம் தனது கடும் எதிர்ப்பைப் பதிவு செய்து இது பெரியார் மண் என்பதை மீண்டும் உறுதி செய்தது. அயோத்தியில் ராமன் கோயில் கட்டுதல்; இராமராஜ்யம் உருவாக்குதல்; அரசு விடுமுறை நாளை ஞாயிற்றுக்கிழமைக்கு பதிலாக வியாழக்கிழமையாக்குதல்; இந்து தேசிய நாள் ஒன்றை அரசு நாளாக அறிவித்தல் என்ற கோரிக்கைகளோடு ‘இராமராஜ்ய ரதயாத்திரை’ உ.பி., ம.பி., மகாராஷ்டிரம், கர்நாடகா, கேரளம் வழியாக தமிழ்நாட்டின் எல்லையான செங்கோட்டையில் மார்ச் 21இல் நுழைந்தது. மதவெறியைத் தூண்டி விடும் நோக்கத்தோடு நடத்தப்படும் ரத யாத்திரையை எதிர்த்து மறியல் செய்வோம் என்று காவி பயங்கரவாத மக்கள் எதிர்ப்புக் கூட்டமைப்பு ஏற்கனவே அறிவித்திருந்தது. திராவிடர் விடுதலைக் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம் உள்ளிட்ட பெரியார் இயக்கங்களும், ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள், தமிழக வாழ்வுரிமை கட்சி, நாம் தமிழர், பாப்புலர் பிரன்ட் ஆப்இந்தியா, மனித நேய மக்கள் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் இணைந்து உருவாக்கிய இந்தக் கூட்டமைப்பின் தலைவர்களும் திட்டமிட்டபடி செங்கோட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

இதற்கிடையே தமிழ்நாட்டில் நடக்கும் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, நடுவண் அரசுக்கு நடுங்கி, நெல்லை மாவட்டம் முழுதும் 144 தடை உத்தரவைப் பிறப்பித்து, பிற மாவட்டத்தார் எவரும் நெல்லைக்குள் நுழையத் தடை விதித்தது. மறியல் போராட்டத்துக்குப் புறப்பட்டுச் சென்ற கழகத் தலைவர் கொளத்தூர் மணி, த.பெ.தி.க. பொதுச் செயலாளர் கோவை இராமகிருஷ்ணன் ஆகியோர் புளியங்குளத்தில் அவர்கள் தங்கியிருந்த விடுதிகளில் விடியற்காலை 5 மணியளவில் கைது செய்யப்பட்டனர். மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவஹிருல்லாவும் புளியங்குளத்தில் கைது செய்யப்பட்டார். இவர்களோடு உடன் சென்ற தோழர்களும் கைது செய்யப்பட்டனர்.

தொல் திருமாவளவன், வேல் முருகன், சீமான், தெகலான் பாகவி உள்ளிட்டோர் வழியில் கைது செய்யப்பட்டனர். காவல்துறை கெடுபிடிகளையும் மீறி தென்காசியில் 500க்கும் மேற்பட்டோர் ரத யாத்திரையை மறியல் செய்ய திரண்டிருந்தனர். அதிர்ச்சியடைந்த காவல்துறை செய்வதறியாது திகைத்து, தோழர்களைக் கைது செய்யத் தொடங்கியது. தோழர்கள் கைது செய்யப்பட்டு முடியும் வரை இராம ரத யாத்திரை எல்லையிலேயே நிறுத்தப்பட்டிருந்தது.

கட்டுவதற்கு திட்டமிட்டிருக்கும் இராமர் கோயிலைப்போல் மிகப் பெரும் டிரக்கில் இராமன் சிலையோடு சங் பரிவாரங்கள் வந்தன. பார்ப்பன புரோகிதர்கள் அர்ச்சனை செய்தார்கள். வடநாட்டு காவி உடை சாமியார்கள் உடன் வந்தனர். 144 தடை உத்தரவு பிறப்பித்த நிலையில் ‘இராமன் ரதம்’ மட்டும் ஊர்வலமாக வருவதற்கு எப்படி அனுமதிக்கப் பட்டது என்ற கேள்விக்கு தமிழக அரசிடம் பதில் இல்லை. இதற்கிடையே தமிழ்நாடு சட்ட மன்றத்தில் மார்ச் 19ஆம் தேதி ஆளும் கட்சி கூட்டணியில் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் தனியரசு, கருணாஸ், தமிமுன் அன்சாரி - ரதயாத்திரைக் குறித்த கவன ஈர்ப்பு தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளாததைக் கண்டித்து வெளிநடப்பு செய்தனர்.

20ஆம் தேதி சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலின், “இரத யாத்திரையை அனுமதித்தது யார்? இராமன் கோயில் கட்டும் பிரச்சினை உச்சநீதிமன்ற விசாரணையில் இருக்கும்போது எப்படி இதை அனுமதிக்கலாம்” என்று கவன ஈர்ப்பு தீர்மானம் வழியாகக் கேட்டார்.

முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, இது மத ஊர்வலம் என்றும் ஏனைய மாநிலங்களைப் போல் தமிழக அரசு அனுமதித்தது என்றும், மத ஊர்வலத்தை எதிர்க்கட்சிகள் அரசியலாக்குகின்றன என்றும் பதில் கூறினார். பதில் உரையில் திருப்தி அடையாத தி.மு.க. காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் ரதயாத்திரைக்கு தடை கோரி சட்டசபைக்குள் முழக்கங்களை எழுப்பினர். அதைத் தொடர்ந்து அனைவரும் வெளியேற்றப்பட்டனர்.

பிறகு தலைமைச் செயலக வாயிலில் அமர்ந்து சாலை மறியலில் ஈடுபட்டனர். “அனுமதிக்காதே; அனுமதிக்காதே! மதவெறியைத் தூண்டும் யாத்திரையை அனுமதிக்காதே; இது பெரியார் மண்; இது அண்ணா மண்; பா.ஜ.க.வின் கைக் கூலி எடப்பாடி ஆட்சியே பதவி விலகு” என்று முழக்கங்களை எழுப் பினர். பிறகு காவல்துறை அனைவரை யும் கைது செய்தது. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பார்ப்பனிய மதவாத வெறி சக்திகளுக்கு எதிராக தமிழகம் மீண்டும் கொதித்தெழுந்த காட்சியைக் காண முடிந்தது. ஆத்திர மடைந்த சில காலிகள் ஆலங்குடியில் பெரியார் சிலையை சேதப்படுத்தி யுள்ளனர்.

இரத யாத்திரையை எதிர்த்து சென்னையில் மட்டும் ஒரே நாளில் 69 இடங்களில் நடந்த போராட்டத்தில் 3314 பேர் கைதாகியுள்ளது குறிப்பிடத் தக்கது.

## கட்டமைப்பு நிதியாக ரூ.10 ஆயிரம் வழங்கினார்

## மகேஷ் – இளவரசி இல்லத் திறப்பு விழா



நாகை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகச் செயலாளர் மகேஷ்-இளவரசி, புதிய இல்லத் திறப்பு விழா, மார்ச் 11ஆம் தேதி காலை மயிலாடுதுறை மாப்படுகை பகுதியில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி இல்லத்தைத் திறந்து வைத்தார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், அழகிரி (ம.தி.மு.க.), வழக்கறிஞர் குபேந்திரன், பத்திரிகையாளர் சுகுணா திவாகர் உள்ளிட்ட பலரும் விழாவில் உரையாற்றினர். முன்னதாக பெரம்பலூர் தாமோதரன், மந்திரமா தந்திரமா நிகழ்ச்சிகளை நடத்தினார். அனைவருக்கும் பேராசிரியர் வெற்றியழகன் எழுதிய ‘வாஸ்து சாஸ்திர மோசடி’ நூல் விழா நினைவாக வழங்கப்பட்டது. கழகக் கட்டமைப்பு நிதிக்கு ரூ.10,000/-மும், ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சிக்கு ரூ.5000/-மும் மகேஷ் வழங்கினார். (நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்-ஆர்)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இந்து மதக் கொடுங்கோன்மை குறித்து தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவகாமி, இஸ்லாமிய மத வன்முறை குறித்து குடியுரிமைப் பாதுகாப்பு நடுவத்தைச் சார்ந்த வழக்குரைஞர் அலாவுதீன், கிறிஸ்தவ மத வன்முறை குறித்து பேராசிரியர் அருள் அமலன் ஆகியோர் விரிவாக வரலாற்றுச் சான்றுகள் பைபிள் மற்றும் குர்ரானி லிருந்து ஆதாரங்களை எடுத்துக்காட்டி உரையாற்றி னார்கள்.

தொடர்ந்து 7 மணியளவில் பாரூக் நினைவரங்க நிகழ்வு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் தொடங்கியது. இந்திய பகுத்தறிவாளர் கூட்டுச் சங்கத்தின் புரவலர் யு. கலாநாதன், த.பெ.தி.க. பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன், சமூக செயல்பாட்டாளர் ரோசி மது, தமிழ்நாடு திராவிடர் கழகத் தோழர் பிரபாகரன், எழுத்தாளர் பீர் முகம்மது, வழக்குரைஞர் கலையரசன், பி.யு.சி.எஸ். அமைப்பைச் சேர்ந்த வழக்குரைஞர் பாலமுருகன், எழுத்தாளர் பாமரன் ஆகியோர் உரையைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார்.

பாரூக் முகநூலில் கடவுள், மதம் குறித்து விவாதித்தார் என்பதற்காக படுகொலை செய்யப்பட்டிருக்கிறார் என்பது மதவெறியின் கொடூரத்தைக் காட்டுகிறது என்பதை சுட்டிக்காட்டி தமிழ்நாட்டில் இஸ்லாமிய தலைவர்கள் எவரும் பாரூக்கை கொலை செய்தவர்களை வெளிப் படையாகக் கண்டிக்க முன்வராததையும் சுட்டிக் காட்டினார். இனி திராவிடர் விடுதலைக் கழக மேடைகளில் எல்லா மதங்களின் பிற்போக்குக் கருத்துகளையும் விவாதிப்போம் என்று அறிவித்தார். கோவை மாவட்ட கழகத் தலைவர் நேருதாஸ் நன்றி கூறினார். குருதிக் கொடை வழங்கியவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மலேசிய தலைநகர் கோலாம்பூரிலும், தமிழ் நாட்டில் சென்னை, காஞ்சிபுரம், பேராவூரணி, ஆத்தூர் உள்ளிட்ட பகுதிகளிலும் ஃபாரூக் நினைவேந்தல் நிகழ்வு - படத்துக்கு மாலை அணிவித்தல் நடந்தன.

## கழகத் தோழர் கார்த்திக்–திரிபுரசுந்தரி ஜாதி மறுப்பு மணவிழா



சென்னையில் பணியாற்றும் மயிலாடுதுறை கழகத் தோழர் இரா. கார்த்திக் - மோ. திரிபுரசுந்தரி ஜாதி மறுப்பு மண விழா 18.2.2018 ஞாயிறு காலை 9 மணியளவில் மயிலாடுதுறை ‘ஆசிர்வாத்’ திருமண மண்டபத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடந்தது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வாழ்த்துரை வழங்கினார். சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 23rd March 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN